©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 232] CHENNAI, WEDNESDAY, AUGUST 14, 2013
Aadi 29, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், கரூர்.**

**கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம் இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண். அ2/2184/2012)*

**No. VI(2)/155(a-1)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம், இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. டி. இளஞ்சியம் என்பவர் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் அரசாணைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சியின் பொது நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் சீர்கெட காரணமாக இருந்ததோடு, ஊராட்சி நிதியில் பெரும் இழப்பினை ஏற்படுத்தியது பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் உறுதிபடுத்தப்பட்டதால், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் அதிகாரத்தினை தவறாக பயன்படுத்திய இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. டி. இளஞ்சியம் என்பவரை இனுங்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த உத்தரவு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம் இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.**

*(அ2/2184/2012)*

**No. VI(2)/155(a-2)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206 உட்பிரிவு 11ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கரூர் மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியம், இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எம். செல்வராஜ் என்பவர் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் அரசாணைகளுக்கு முரணாக செயல்பட்டு ஊராட்சியின் பொது நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் சீர்கெட காரணமாக இருந்ததோடு, ஊராட்சி நிதியில் பெரும் இழப்பினை ஏற்படுத்தியது பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் உறுதிபடுத்தப்பட்டதால், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் என்னும் அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தி அரசு நிதியை கையாடல் செய்து இழப்பு ஏற்படுத்திய இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எம். செல்வராஜ் என்பவரை இனுங்கூர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த உத்தரவு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்படுகிறது.

கரூர்,
2013 ஆகஸ்ட் 13.

**ச. ஜெயந்தி,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.